# பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள்



தமிழ்த்திருநாடு சான்றோர் பலரை நாட்டிற்கு வழங்கி அணி செய்திருக்கிறது. மொழிக்காக வாழ்ந்தவர் பலர். நாட்டின் விடுதலைக்காக வீழ்ந்தவர் பலர். மண்டிக் கிடந்த மூடக்கருத்துகளைச் சிதைத்தவர் சிலரே. அவருள் தமிழ்நாடு தவம் செய்து பெற்றவர் ஒருவருண்டென்றால், அவர்தாம் பெரியார்.

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்.

இப்பாடல் வரிகள் பெரியாரைப் பற்றிய பாவேந்தரின் படப்பிடிப்பு.

பழந்தமிழ்ச்சமுதாயத்தில் பெண்கள் நன்மதிப்புப் பெற்றிருந்தார்கள்; புலவராய், பாடினியாய், விறலியாய்த் திகழ்ந்து மாண்புடை மன்னரால் மதிக்கப் பெற்றார்கள். கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தனர். மறங்கொண்ட மன்னனின் பகையை மாற்றத் தூது சென்ற பெருமையையும் அக்காலத்துப் பெண்கள் பெற்றிருந்தார்கள். அக்காலச் சூழல் பிற்காலத்தே மாறியது. வந்தவர் கூறிய கருத்தையெல்லாம் இங்கு வாழ்ந்தவர் ஏற்றனர்; பெண்களை அடிமைப்படுத்தினர்; வீட்டிற்குள் முடக்கி வைத்தனர். எனவே, நாட்டு விடுதலைக்குப் போராடிய பெரியார், பெண்களின் சமூக விடுதலைக்கும் போராடினார்.

பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை. ஒன்று, அடிப்படைத் தேவைகள்; பிறிதொன்று, அகற்றப்படவேண்டியவை. பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியன அடிப்படைத் தேவைகள். குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியன அகற்றப்படவேண்டியவை.

### பெண்கல்வி

பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை, வீட்டில் அவர்களை முடக்கி வைத்ததே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல் அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும். ‘நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய,

Thoothukudi 99445 11344 Tirunelveli 98942 41422 Ramanathapuram 75503 52916 Madurai 98431 10566

பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது. அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு அவர்களை வெளியேற்றவேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று; சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது' என்று பெரியார் உறுதியாக எடுத்துரைத்தார்.

"ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு உலகப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் தாராளமாய்க் கொடுக்கவேண்டும். நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை; இவ்விழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" என்றார் பெரியார்.

பெண்ணுரிமை

பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்கவேண்டும் என்று விரும்பியவர் பெரியார். அதற்காக அவர், அவர்களை ஆயத்தப்படுத்தும் முறையே தனியானது. 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்று சிந்தித்தவர் பெரியார். அவர், 'பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல், மனிதசமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்கவேண்டும்' என்று வலியுறுத்தினார்.

சொத்துரிமை

பெரியார் பெண்ணுரிமை மறுப்புக்கான காரணங்களை நன்கு ஆராய்ந்தார். பெண்களுக்கு வழிவழிவரும் சொத்துரிமை மறுக்கப்பட்டமையே அவர்களின் அடிமை வாழ்வுக்கு அடிகோலியது என்று உணர்ந்தார். அதற்காக, அவர்கள் போராடவும் கிளர்ச்சி செய்யவும் வேண்டுமெனக் கூறினார்.

"பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்துவிட்டால், அவர்களுக்கு இருக்கும் எல்லாவகையான அடிமைத்தனங்களும் ஒழிந்துபோகும். பெண்ணடிமை என்பதற்குள்ள காரணங்கள் பலவற்றில் சொத்துரிமை இல்லாதது என்பதே முதன்மையான காரணம். ஆதலால், பெண்கள் தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து சொத்துரிமைக்குக் கிளர்ச்சி செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாத உடனடிச் செயலாகும்" என்று பெரியார், தம் கட்டுரைகளில் எழுதியும் மேடைகளில் பேசியும் வந்தார். இன்று அச்சிந்தனை நடைமுறைக்கு வந்ததுள்ளது.

அரசுப்பணி

அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப்போலவே பெண்களும் அரசுப்பணியைப் பெறவேண்டும். அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும்போது, நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும். "பெண்களுக்கு எல்லா வகையான

உத்தியோகமும், கிடைக்கச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறோம்" என்று, பெரியார் அன்று சிந்தித்ததனைத் தமிழக அரசு இன்று நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அகற்றப்பட வேண்டியவை

சடங்குகளையும் மூடநம்பிக்கைகளையும் களைவதில் உறுதியான உள்ளம் படைத்தவராக இருந்தார் பெரியார். பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார். விடுதலைக்கு முன்னிருந்த பெருங்கொடுமைகளுள் குழந்தை மணமும் ஒன்று. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமா? இது, சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு எனக்கூறி அதனை நீக்கப் பாடுபட்டார்.

மணக்கொடை மறுப்பும் கைம்மை ஒழிப்பும்

தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர், தம் மகனின் கல்விக்காகப் பணம், செலவழிப்பதனைத் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவிமூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிடவேண்டுமென்று துடிக்கின்றனர். "சமுதாயத்தில் முறையான ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். தமிழ்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும். "தாமே பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்" என்று பெரியார் நாப்பறை ஆர்த்தார். கணவனை இழந்தோர் மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை என்றும் தெரிவித்தார்.

ஒழுக்கம்

'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்கவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலர்க்கும் பொதுவாகும் என்பது, அவர்தம் கருத்து.

பெரியார், சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர்; சமூகமாற்றத்தை விரும்பியவர்; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர்; பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர். பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

பிறரை மதிக்க வேண்டும், அது மரியாதை. தன்னைத்தானே மதிப்பதும், தன் மரியாதையைத் தக்கவைத்துக்கொள்வதும் சுயமரியாதை. சின்னக் குழந்தையையும் 'வாங்க, போங்க...' என்று மரியாதையுடன் அழைத்துப் பேசுவது பெரியாரின் பண்பு. பெரியார் மரியாதையையும் – சுயமரியாதையையும் தம்மிரு கண்கள்போலக் கருதினார்.

கேரளாவில் வைக்கம் என்னும் ஊரில் தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில் சுற்றுத் தெருவில் நடப்பதற்குத் தடை இருந்தது. அதை எதிர்த்துப் போராடி வெற்றிபெற்றதால் 'வைக்கம் வீரர்' என்றழைக்கப்பட்டார்.

"மேல்சாதி – கீழ்ச்சாதி வேற்றுமை, தீண்டாமைக் கொடுமைகள் அகல, எல்லாருக்கும் கல்வி அவசியம்; எல்லாரும் கல்வி பெற வேண்டும் " என்று பெரியார் கூறினார். இந்தக் கருத்துகள் இளைஞர்களைக் கவர்ந்தன. அதனால், சுயமரியாதை இயக்கம் வலுவடைந்தது.

"மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டுமென்பதை ஏற்கிறீர்கள். அதுபோல, மனிதர்களில் சரிபாதியாக உள்ள பெண்களையும் மதிக்க வேண்டும். ஆண்கள் செய்யும் எல்லாவற்றையும் பெண்களும் செய்யவேண்டும். அவர்களால் செய்யவும் முடியும். பெண்களுக்கு நகையோ அழகான உடைகளோ முக்கியம் இல்லை; அறிவும் சுயமரியாதையும் தான் மிக முக்கியம்."

இராமசாமி இவ்வாறு பேசியது பெண்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்களும் துணிவு பெற்று மேடையேறிப் பேசினார்கள். தாய்மார்கள்தாம் இராமசாமிக்குப் 'பெரியார்' என்று பட்டம் வழங்கினார்கள்.


பெண் விடுதலைக்கு முதல்படியாகப் பெண்கள் எல்லாரும் கல்வி கற்கவேண்டுமென்பதைப் பெரியார் வலியுறுத்தினார். பெண்கள் துணிவுடனும் நம்பிக்கையுடனும் விளங்க வேண்டும் என்றார். மல்யுத்தம், குத்துச்சண்டை போன்ற விளையாட்டுக்களையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்றார். அரசாங்கப் பணி, இராணுவம், காவல்துறை ஆகியவற்றிலும் பெண்கள் சேர்க்கப்பட வேண்டுமென்றார்.

குணத்திலும், அறிவிலும் ஆணுக்கும் – பெண்ணுக்குமிடையே வேறுபாடு கிடையாது; இருவரும் சரிசமமானவர்களே என்பதை மீண்டும்மீண்டும் வலியுறுத்தினார். தம் தொண்ணூற்றைந்து வயதிலும் கூடப் புதிய சிந்தனைகளை எடுத்துக்கூறினார்.

'அறிவு என்பது வளர்ந்துகொண்டே இருக்கும்; எனவே, புதியவற்றை ஏற்க வேண்டும்' என்றார். நெடுநாள் வாழ்ந்தவரான பெரியார், நமது சமூகத்திற்குச் செய்த சேவைகள் எண்ணற்றவை. பெரியாரின் பெருமைக்குக் காரணம், சுயசிந்தனையும் சிந்தித்ததைச் சொன்ன துணிச்சலும்தான். நாம் அவற்றை அவரிடமிருந்து கற்றுக் கொள்வோம்; நம்மை வளர்த்துக் கொள்வோம்!

சிறப்புக் குறிப்புகள் :

* 17.9.1879இல் பிறந்து, 24.12.1973இல் மறைந்த பெரியார், தம் வாழ்நாளில் 8600 நாள்கள், 13,12,000 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து, 10,700 கூட்டங்களில் 21,400 மணி நேரம் மக்களுக்காக உரையாற்றிச் சமூகத் தொண்டாற்றினார்.




பெரியாரின் கையொப்பம்

* 1970ஆம் ஆண்டு சமூகச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அவையின் 'யுனெஸ்கோ விருது' பெரியாருக்கு வழங்கப்பட்டது.
* நடுவண் அரசு 1978ஆம் ஆண்டு பெரியாரின் உருவம் பொறித்த அஞ்சல்தலையை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

நினைவு

## 15.5 திராவிடக்கொள்கைவாதம்

### பெரியார் (1879–1973)



**அறிமுகம்**

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் இ.வெ.ரா. பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர் தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார். இவரைப்பற்றி விரிவாக இப்பாடத்தில் காணலாம்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய

வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக் கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஈ.வெ.ராமசாமி என்ற இயற் பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879-இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும், ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். (காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920-களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா.பெரியார்.

பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பெரியர் கடுமையாக விமர்சித்தார். தேசம், தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அவர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

### தேசியவாதம் என்பது சுரண்டலாகும்

இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசியவாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

### உலகளாவிய தேசியவாதத்திற்கு மறுப்பு

பெரியார் தனது இலங்கைப் பேருரையில்,

பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்தவாதி

பெரியாரின் படைப்புகள் மற்றும் மரபு

சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக சமத்துவம், சுயமரியாதை மற்றும் மொழியின் பெருமையை முன்னிறுத்தும் அரசியலை வழி நடத்தினார். ஓர் சமூக சீர்திருத்தவாதியாக அவர் சமூகம், பண்பாடு மற்றும் பாலின சமத்துவமின்மை போன்றவற்றில் கவனம் செலுத்தினார். அவர் மக்கள் தங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவின் அடிப்படையில் செயல்பட வலியுறுத்தினார். பெண்கள் அனைவரும் சுதந்திரமாக இருப்பதுடன் பிள்ளை பெற்றுக் கொடுப்பதற்காக எனும் நிலையை மாற்றி அவர்களுக்கு வேலை சுயமரியாதை இயக்கம், சடங்குகளற்ற திருமணங்களை ஊக்குவித்ததுடன் பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் விவாகரத்து செய்யும் உரிமைகளும் வழங்க வேண்டும் எனப் போராடினார். அவர் மக்கள் தங்களின் பெயருக்கு பின் உள்ள சாதிப் பெயரை கைவிடுமாறும் அதனைக் குறிப்பிட வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தார். 1930-களில் பட்டியல் இனத்தவரால் சமைக்கப்பட்ட உணவை பொதுக்கூட்டங்களின் பின்னர் சமபந்தியாக நடத்திக் காட்டினார்.

காலப்போக்கில் சாதி, மத அரசியல் வேறுபாடுகளைக் கடந்த பெருமதிப்புடன் 'பெரியார்' நவீன தமிழகத்தின் தந்தையென அழைக்கப்படுகிறார்.

நன்றி அருண் ஜனார்த்தனன், தி.நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 13.3.2018

தேசம், தேசியவாதம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளார். 'இந்திய தேசியவாதம்' என்ற கருத்தை சிலர் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியவாதத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். இந்திய தேசியவாதத்தை மட்டுமின்றி, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியவாதத்தை மறுக்கிறார் பெரியார்.

"தேசியவாதம் என்பது முதலாளித்துவவாதிகள் தங்கள் தங்கள் மூலதனத்தை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை பலி கடாவாக்குவதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, "இங்கிலாந்து நாட்டின் பணக்கார சமூகத்திற்கு அமெரிக்கா நாட்டின் பணக்கார சமூகத்துடன் மோதல் வந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள், அந்நாட்டின் ஏழைமக்களைப் பார்த்து "ஓ இங்கிலாந்து மக்களே! தேசபக்தர்களே! தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, என்று கூறி ஏழை சமுதாயத்தை தூண்டுகின்றனர். இவ்வகைப் பொய்யுரைகள் மூலம் மக்களைச் சுரண்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று கூறுகிறார்.

பல்வேறு தேசிய இனங்களையும் - தேசங்களையும் உள்ளடக்கிய நாடு ரஷ்யா. அந்த ஒன்றுபட்ட ரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்றுகூறி, அந்தவகையான புரட்சிக்கு ஆதரவாக நின்றவர் பெரியார்.

"கடவுள், மதம், மற்றும் தேசியவாதம் ஆகியவை அடியோடு அழிக்கப்பட்ட நாடுகளில் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. அதுபோன்ற நாடுகளில் கடவுள், மதம் மற்றும் தேசப்பற்று ஆகியவை இல்லை. ஆனால் மனித சமூக சமத்துவ சமுதாயமே அந்நாடுகளில் முக்கியமாக்க கருதப்பட்டது. அங்கு பணக்காரன் - ஏழை, முதலாளி - தொழிலாளி, அதிகாரி - குடிமக்கள் என்கின்ற பாகுபாடு காணப்படவில்லை. மேன்மக்களுக்கு சமத்துவ விரும்பிகளும் கடவுள் மற்றும் தேசியவிவாதத்திற்கு முன்னுரிமை தரும்

...க்கு சமமானவர்கள் அல்ல.

உலகில் உள்ள அனைத்து ...ங்களையும், தேசியங்களையும் ...யாக எதிர்த்தது போல 'இந்திய தேசம்' ...து, பல்வேறு தேசிய இனங்களை - ...வேறு தேசங்களை இணைத்து ...வாக்கப்பட்ட ஒன்று - அந்த இணைப்பு ஒரு ...யின் ஆதிக்கத்திற்குக் கருவியாக இருப்பதால் அதையும் பெரியார் எதிர்க்கிறார்.

## இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்

'தேசம்' என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்ற கேள்விக்கு அவரே சிறப்பான பதில் அளித்துள்ளார்.

"மதராஸ்" என்பது ஒரு தனித் தேசம் அல்லவென்றும் அது தனித்து செயல்பட முடியாது என்றும் தோழர்கள் சிலர் சொல்கிறார்கள். மதராஸ் ஒரு தனி தேசமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் 'திராவிடம்'. அதனுடைய நாகரிகம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவை வங்காளம், பம்பாயிடம் இருந்து வேறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியால் ஆங்கில மொழி அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆங்கிலமும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஒழிந்து ஹிந்தி மொழி வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நாட்டுடன் சேர்ந்துவிடும்.

"இந்தியா ஒரு 'தேசம்' என்று சொல்வதைவிட, 'திராவிடநாடு' ஒரு 'தேசம்', ஆந்திரநாடு ஒரு 'தேசம்' வங்காளநாடு ஒரு 'தேசம்' என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

மாறுபட்ட ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு 'தேசம்' என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஆளலாம் என்றால், இதை யார் ஒப்புகொள்வார்கள் என்று கேட்கிறார். பெரியார் முன்மொழிந்த 'திராவிட தேசியவாதம்' முற்றிலும் பெருவாரியாக மத ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது.

## மொழிக் கொள்கை

"அவரவர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாளர்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

### சாதியற்ற சமுதாயம்


பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே' என்று தொடர்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம், பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த்தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டபோது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தக்

திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

"திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி; சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி; முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி; சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது." என்று 1950களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

## 14.5 பெரியார் ஈ.வெ.ராமசாமி



ராஜாஜி அரசாங்கம் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது என முடிவெடுத்ததை தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அழித்து "வட இந்திய ஏகாதிபத்தியத்தை" நிறுவும் முயற்சி என பெரியார் கருதினார். மேலும் இந்தி

திணிப்பு என்பது திராவிடர்களை அடிமைப்படுத்தி ஆரியர்களின் மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சி என்று பெரியார் கூறினார்.

சென்னை மாகாணத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றதன் விளைவாக மாகாண அரசாங்கத்தால் பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பதினைந்து ஆண்டுகளில் இருபத்து மூன்று முறை சிறை சென்றார் என்பதனால் 'சிறைப்பறவை' என்றும் அடைமொழியிட்டு அழைக்கப்பட்டார். 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவர் நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு நீதிக் கட்சியானது ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியதுடன் இது ஆங்கிலேய அரசாங்கத்தின் இந்தியாவிற்கான அமைச்சருடைய நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றது. சென்னை மாகாண காங்கிரசில் பெரியார் முன்னோடியாக இருந்ததால் அரசியல் அரங்கில் பிராமணரல்லாதோர் அரசியலில் பங்குபெறுவதற்கான விகிதாச்சார பிரதிநிதித்துவத்திற்குச் சாதகமாக காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்ததில் மிகச் சிறப்பாக தனது முயற்சியை செய்தார். வைக்கம் சத்தியாகிரக போராட்டத்திற்கு தனது சிறப்பான தலைமையை அளித்ததுடன் காங்கிரஸ் கட்சி நிறுவிய சேரன்மா தேவி குருகுலத்தில் நடந்த சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

பெரியார் தன்னுடைய திட்டங்களை காங்கிரசு கட்சி ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தபோது காங்கிரசை விட்டு விலகி 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். இவ்வியக்கம் தேர்தல் அரசியலை தவிர்த்ததுடன் சமூக சீர்திருத்தம், சாதிமுறையை ஒழிப்பது, மாண்பற்ற தன்மையை நீக்குவது, பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம், பரம்பரை அர்ச்சகர் உரிமையை எதிர்ப்பது போன்றவற்றிற்காக பிரச்சாரம் செய்தது. சுயமரியாதை இயக்கம் மிக தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்டு பழங்காலம் முதலான மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் எதிர்த்ததுடன் பகுத்தறிவற்ற மரபுகள் மற்றும் சமத்துவமற்ற தன்மைகள் நீடித்திருப்பதை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் மதத்தின் பங்குப்பற்றியும் வினா எழுப்பியது. இந்த சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு மாண்பு மறுப்பினை எதிர்த்தல் மற்றும் தனிமனித சமத்துவம் (பெண்கள் உட்பட) போன்றவை மரபு மற்றும் மதத்தின் கோரப்பிடியின் கீழ் இருப்பதை எதிர்த்து பிரச்சாரம் செய்தது.

சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு சாதி துணைப்பெயர்களை துறப்பதுடன், சாதி-மத அடையாளங்களையும் கைவிட ஆணையிட்டது. அது சாதியற்ற, புரோகிதர்அற்ற தவிர சம்பிரதாய சடங்குகள் அற்ற ஒப்பந்தத் திருமணங்களை அறிமுகம் செய்தது. இது சுயமரியாதைத் திருமணம் எனப்பட்டது. இவ்வியக்கம் தீண்டாமைக்கு எதிராக மட்டும் போராடவில்லை, மாறாக சாதிமுறை அமைப்பு மற்றும் சாதி அடிப்படையிலான பலவீனங்கள், தனிமனிதர்கள் மீது திணிக்கப்படும் மாண்பு குறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றினையும் எதிர்த்து போராடியது.




சுயமரியாதை இயக்கம் வெறும் பெயருக்காக மட்டும் பெண்ணுரிமை பற்றி பேசவில்லை. அது பெண்களின் சம உரிமை, சமநிலை மற்றும் சம வாய்ப்புக்காக பிரச்சாரம்

செய்தது. பெண் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் பங்குப்பணி ஓர் ஈடு இணையில்லாதது, என்பதால் அதன் காரணமாகவே பெண்கள் மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்கு "பெரியார்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. பெரியாரின் நாளேடுகளான "குடியரசு," " புரட்சி", பின்பு 'விடுதலை' போன்றவை சுயமரியாதைக் கருத்துக்களை சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்தன.

**14.6 சுயமரியாதை இயக்கம்**

1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. 1937ஆம் ஆண்டு ராஜாஜி என்று புகழ்பெற்ற C.ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் வழிநடத்தப்பட்ட காங்கிரசு கட்சி ஓரிடத்தை தவிர அனைத்து இடங்களிலும் வெற்றிப் பெற்றது. ஆனால் காங்கிரசு கட்சியின் வெற்றியானது நீதிக்கட்சியின் வீழ்ச்சினால் கிடைத்ததாகும். காங்கிரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக ராஜாஜி ஆனார்.

அதிகாரத்திற்கு வந்த உடனே காங்கிரசு அரசாங்கம் பள்ளிக் கூடங்களில் இந்தியினை கட்டாயப்பாடமாக அறிமுகப்படுத்தியது. பெரியார் இந்தி எதிர்ப்பு போராட்டத்தினை தொடங்கினார்.



இக்கால கட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி(முன்னதாக 1925-இல் உருவாக்கப்பட்டது) சமதர்மத் திட்டங்களுக்காக தொழிலாளர் இயக்கங்களை ஒன்றிணைத்து தீவிரமாக பரப்புரை செய்து கொண்டிருந்தது. M. சிங்காரவேலர் மற்றும் அவரின் உடன் இருந்தோர் சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த திட்டங்களால் கவரப்பட்டனர். இதன்படி சமூகங்களின் பொருளாதார திட்டங்களுக்கான ஆதரவை விரிவுபடுத்துபடுவதுடன், ஓர் பொதுத் திட்டத்தின் அடிப்படையில் செயலாற்ற ஒத்துக்கொண்டனர். (ஈரோடு திட்டம்).

**சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள்**

அ. திராவிட சமுதாயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்.

ஆ. திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டினை அவர்களுக்குக் கற்பித்தல்.

இ. ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட சமூகத்தைக் காப்பாற்றுதல்

ஈ. மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

பெரியார் பொதுவாக பிராமணரல்லாதவர்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொன்மையான திராவிட பண்பாட்டின் புகழை மீட்டெடுக்க விரும்பினார். பிராமண புரோகிதர்கள் இல்லாத சுயமரியாதைத் திருமணத்தை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்தார். அவர் மத விழாக்களை மக்கள் பின்பற்றுவதை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு சமூக நிகழ்வுகளிலும் பிராமணர்களின் சேவைகளை பயன்படுத்தாமல் இருக்கச் செய்தார்.

**நீதிக் கட்சியின் வீழ்ச்சி**

1929-ஆம் ஆண்டு வரை சுயமரியாதை இயக்கமானது சென்னை மாகாணத்தில் ஓர் முன்னோடி இயக்கமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் அதன் புகழ் மங்கத்தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று, இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும்

சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்தது. இரண்டாவதாக, பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது. இறுதியாக உயர்குடியினர் மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவு அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களித்தன.

### 14.7. இந்தி எதிர்ப்பு போராட்டம்

நீதிக் கட்சியின் வீழ்ச்சியும், தேர்தல் அரசியலில் நுழைய பெரியார் மறுத்ததும், வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழும், இந்திய தேசிய காங்கிரசை 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்தலில் வெற்றிபெற செய்தது. ராஜாஜி முதல் அமைச்சரானார்.





அவர் முழுமையான மது விலக்கு (மது விற்கத் தடை) மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை நடைமுறைப்படுத்தினார். மேலும் ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுக்கு இருக்கும் தடையை நீக்குவதற்கு சட்டம் கொண்டுவந்தார். இருந்தபோதிலும், இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்திய நடவடிக்கையானது பல பள்ளிக் கூடங்களை மூடுவதற்கு காரணமானது. இது சுயமரியாதைக்காரர்கள் மற்றும் தேசியவாதிகளான மறைமலை அடிகள் போன்றோரை ஆத்திரமடையச் செய்தது. இதனால் 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒன்று சேர்ந்தனர். பெரியார் உள்ளிட்ட ஆயிரக் கணக்கான போராட்டக்காரர்கள் கைதானார்கள், மேலும் பல பேர் சிறையிலேயே இறந்தனர்.

### 1944 –சேலம் மாநாடு

1944-ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கெனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி.என். அண்ணாதுரை நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (தி.க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் "திராவிட நாடு" மாநாட்டைக் கூட்டி திராவிடர்களுக்குத் தனி "திராவிட நாடு" கோரினார். மேலும் அவரின் புகழ் பெற்ற வாசகமான "திராவிட நாடு திரவிடர்களுக்கே" எனவும் முழக்கமிட்டார்.

தனித் "திராவிட நாடு" கோரிக்கையைத் தவிர திராவிடர் கழகமானது சாதியற்ற சமூகத்தை ஏற்படுத்துதல், மதச் சடங்குகளைக் கண்டித்தல், பழமை மற்றும் மூடநம்பிக்கைகள் அற்ற சமூகத்தை அமைத்தல் ஆகியவற்றை விரும்பியது.

திராவிடர் கழகமானது கிராம மற்றும் நகர் புறங்களில் குறிப்பாக மாணவர்களிடத்தில் மிகவும் புகழ்பெற்றது, பல பிராமணர் அல்லாத தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தங்களுடைய பெயர்களை தூய தமிழில் மாற்றி கொண்டனர்.

### இந்தி எதிர்ப்புப் போராட்டம் -1965

1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் உறுப்பு 313-ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலக மொழியாக ஆக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை தி.மு.க. துக்க தினமாக அனுசரிக்கத் தீர்மானித்தது. அதன் பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.




தமிழ்நாடு பெருமளவிலான இந்தி எதிர்ப்பு போராட்டங்களை சந்தித்தது. இந்த கிளர்ச்சியால் திமுக மாணவர் சமூகத்திடம் இருந்து பெருமளவு ஆதரவை பெற்றது. இதன் மற்றொரு பக்கம் காங்கிரசு கட்சி தமிழ்நாட்டில் தனது ஆதரவையும், தளத்தையும் இழந்தது. இதற்கிடையில் திமுக. "திராவிட நாடு" கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தேர்தல் அரசியலில் ஊக்கத்துடன் பங்கெடுத்தது.

### 14.8. திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்



1939ஆம் ஆண்டு இந்தியா இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேய அரசாங்கத்தால் ஈடுபடுத்தப்படுவதை விரும்பாத காங்கிரசு அமைச்சரவை பதவியை துறந்தது. பெரியார் திராவிட நாடு கோரிக்கையை எழுப்பினார். 1944 ஆம் ஆண்டு நீதிக்கட்சி பெரியார் தலைமையிலான சேலம் மாநாட்டில் அதன் பெயரை 'திராவிடர் கழகம்' என மாற்றியும், திராவிட நாடு அடைவதே தனது லட்சியம் என்றும் அறிவித்து. சமூக பண்பாட்டு சமத்துவத்திற்கு முன்பாக விடுதலை அடைவது தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினார். 1949 ஆம் ஆண்டில், திராவிட கழகத்தை விட்டு பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டது.

1951ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றமானது உயர்கல்வியில் சாதிவாரி இடஒதுக்கீட்டை உடைத்து எறிந்தது. உடனடியாக பெரியாரின்

சாயந்தொட்டினை மறுசெய்வதை ஒழுங்காயது.

## சுய மரியாதை இயக்கம்

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த சமூக சீர்த்திருத்தவாதி பெரியார் ஈ.வே.இராமசாமி நாயக்கர் ஆவார். மக்கள் மனதில் சுயமரியாதை, பகுத்தறிவு, பெண் விடுதலை, ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் ஆகியவற்றிற்கு வித்திட்டவர் பெரியார்.

ஈ.வே. இராமசாமி, 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் நாள் ஈரோட்டில் செல்வ வளம் மிக்க இந்து குடும்பத்தில் பிறந்தார். தமது 13ஆம் வயதில் திருமணம் செய்து கொண்ட பெரியார், தனது 19 வது வயதில் இல்லற வாழ்வைத் துறந்தார். துறவறம் பூண்டு காவி உடை தரித்து, பல புனித இடங்களுக்குச் சென்றுவந்தார். இவர் காசி சென்றிருந்த போது பார்ப்பனர்கள் மற்ற இனத்தவர்களை இழிவுபடுத்துவதைக் நேரடியாகக் கண்டு அதனைக் கடுமையாக கண்டித்தார். பின்னர் தமிழ்நாட்டிற்குத் திரும்பி, தமது கொள்கைகளைப்

Thoothukudi 99445 11344 Tirunelveli 9942 41422 Ram

## 10.4 சுயமரியாதை இயக்கம்

சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement) அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது. சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் மீது அக்கறை கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையும் அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக் காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது. பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு இயக்கம் நடத்திய சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.

இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது. சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது 'இனம்' ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.

சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது. இந்து சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைகிறார்கள் என்று கருதியது. முஸ்லிம் உயர்குடியினர் தமிழ்நாட்டு முஸ்லிம்களை

பரப்புவதற்காக 1919 ஆம் ஆண்டு காங்கிரசில் இணைந்தார். 1921 ஆம் ஆண்டு சென்னை மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைமை நிர்வாகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1923 ஆம் ஆண்டு அதன் தலைவரானார்.

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். 1924 ஆம் ஆண்டு, கேரளாவில் உள்ள வைக்கத்தில் நடைபெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் பங்கேற்று தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலய நுழைவுத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடினார். இறுதியில் திருவிதாங்கூர் அரசு ஆலய நுழைவு தடைச் சட்டத்தை தளர்த்தி, அனைவரும் ஆலயத்திற்குள் நுழையலாம் என அறிவித்தது. இதன் காரணமாக பெரியாருக்கு 'வைக்கம் வீரர்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.



ஈ.வே. இராமசாமி

காங்கிரசின் நிதியுதவியுடன் சேரன்மாதேவி என்னும் இடத்தில் நடத்தப்பட்ட குருகுலம் பள்ளியை பெரியார் பார்வையிட்டார். அப்பள்ளியில் பார்ப்பனர் மற்றும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தனித்தனியே உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது. இதனைக் கண்டு கொதித்தெழுந்த பெரியார், அத்திட்டத்தைக் கண்டித்ததோடு தனது சென்னை மாநில காங்கிரசுத் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

nathapuram 75503 52916 Madurai 98431 10566 

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநில மாநாட்டில் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு அரசுப்பணியில் இட ஒதுக்கீடு வழங்கும் தீர்மானத்தை கொண்டுவந்தார். காங்கிரஸ் கட்சி அதை ஏற்க மறுத்ததால், பெரியார் அம்மாநாட்டிலிருந்து வெளியேறினார். தனது கொள்கைகளை பரப்பவும், அதனை நடைமுறைப் படுத்துவதற்காகவும் 1925ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

**நோக்கங்கள்**

சுயமரியாதை இயக்கம் மதம், ஜாதி, அரசியல் மற்றும் சமுதாயத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தைக் கடுமையாக எதிர்த்தது.

மூடநம்பிக்கைகளையும், பழமை வாதத்தையும் ஒழிக்கப் பாடுபட்டது.

பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத்திருமணம் மற்றும் குழந்தைத் திருமணமுறை ஒழிப்பு ஆகியவற்றிற்காகக் குரலெழுப்பியது.

**சாதனைகள்**

பெரியார், அர்த்தமற்ற கொள்கைகள், மூடநம்பிக்கைகள் மற்றும் நம்பகத் தன்மையற்ற புராணக் கதைகளை கண்டித்து பொது மேடைகளில் சாடினார். அவர் தனது சுயமரியாதைக் கொள்கைகளை, குடியரசு, புரட்சி மற்றும் விடுதலை போன்ற பத்திரிகைகளின் மூலம் பரப்பினார். இவர் சமுதாயத்தில் நிலவிய தீமைகளைப் பற்றி பல புத்தகங்கள் வெளியிட்டார்.

பெரியார் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து அவர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்றறிந்தார். ஏழ்மையே சமுதாயத்தில் நிலவும் தீமைகள் அனைத்திற்கும் காரணம் என்பதை உணர்ந்தார். தாய்நாடு திரும்பியவுடன், 14 அம்ச சோஷலிச அறிக்கையினை வெளியிட்டார். நீதிக்கட்சி இதனை ஏற்றுக்கொண்டு அதனைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டது.

பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவும், மக்களின் ஆரோக்கிய வாழ்விற்காகவும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அறிவுறுத்தினார். தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை இவர் தூண்டியது மட்டுமல்லாமல் எளிமையாகக் கல்வி கற்க ரோமானிய எழுத்து முறையைப் பின்பற்றவும் அறிவுறுத்தினார். இவருக்கு சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி தோல்வியைத் தழுவியது. இதனால் நீதிக்கட்சியின் வீழ்ச்சி தவிர்க்க முடியாததாயிற்று. 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி 'திராவிடர் கழகம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பெரியாரின் ஆசைகளை தி.மு.க மற்றும் அ.தி.மு.க கட்சிகள் நிறைவு செய்து வருகின்றன.

சி. என். அண்ணாதுரை

தமிழக மக்களால் அன்புடன் பேரறிஞர் அண்ணா என்று அழைக்கப்படும் சி.என். அண்ணாதுரை 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் காஞ்சிபுரத்தில் பிறந்தார். இவர் தனது எம்.ஏ பட்டத்தை, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் முடித்தார். இவர் திராவிட

SURESH IAS ACADEMY
RESEARCH & DEVELOPMENT

திராவிடர்களாகவே கருதினர். இருந்தபோதிலும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்யத் தயங்கவில்லை. இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா, ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

### பெரியார் ஈ.வெ.ரா



பெரியார் ஈ.வெ.ரா

பெரியார் ஈ.வெ. ராமசாமி (1879–1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார். இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர், சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவார். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளைஞராக இருந்தபோது ஒருமுறை வீட்டைவிட்டு வெளியேறிய அவர் பல மாதங்கள் வாரணாசியிலும் ஏனைய சமயம் சார்ந்த மையங்களிலும் தங்கியிருந்தார். வைதீக இந்து சமயத்துடன் ஏற்பட்ட நேரடி அனுபவங்கள் இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்தன. வீடு திரும்பிய அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனித்து வந்தார். அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கின. ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918–1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.

1917 க்குப் பின்னர் பிராமணரல்லாத நீதிக் கட்சியின் எழுச்சிக்குப் பின்னர் சி. ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி. வரதராஜுலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1920–1922) ஆதரவாகத் தான் வகித்துவந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார். லாபம் தரும் தனது வணிகத்தைக் கைவிட்டு செயலார்வமிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆனார். காதிக்கு துணைநின்ற அவர் தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார். மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது தோப்பிலிருந்த 500 தென்னை மரங்களை வெட்டினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை வைக்கம் வீரர் எனப் பாராட்டினர். இதே சமயத்தில் சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே. சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது. இதனைப் பெரியார் கண்டித்து எதிர்த்த பின்னரும், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்தார்.



தந்தை பெரியார் நினைவகம் (வைக்கம், கேரளா)

சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளி பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீ அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியா

முனைப்புடன் இருந்தார். இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்ற முயற்சி செய்து தோல்வியடைந்தார். இது போன்ற பிரச்சனைகளால் 1925இல் காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடிஅரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும். பிராமணரல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களை அது வெளிக்கொணர்ந்தது. ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

காலவோட்டத்தின் ஊடாகப் பெரியார் பல நாடுகளுக்குச் சென்றார். அந்நாடுகளைச் சேர்ந்த அறிவார்ந்த மக்களோடு உரையாடினார். சிங்கப்பூர், மலேசியா (1929–30, 1954) எகிப்து, சோவியத் ரஷ்ய குடியரசு (தற்போதைய ரஷ்யா), கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் போர்த்துகல் (1931–1932) மற்றும் பர்மா (1954இல் நடைபெற்ற புத்தரின் 2500 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார்) ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார். சோவியத் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அவர் பெற்ற பயணஅனுபவங்கள் அவரை சமதர்மக் கருத்துக்களின்பால் நாட்டம்கொள்ள வைத்தன. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடமைவாதியுமான சிங்காரவேலருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். B.R. அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார். B.R. அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

1937இல் ராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937–39) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர் நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944இல் திராவிடர் கழகம் (திக) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி (1952–54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கல்வித் திட்டம் (சாதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை) என விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. கு. காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொன்னூற்று நான்காவது வயதில் (1973) இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

### பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு

தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் வலியுறுத்தினார். பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறுவகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்தாக அவர் கூறினார். அம்முறை சுற்றுச்சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினார். வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைபாட்டை மேற்கொள்ள வைத்தது.

### சமயம் குறித்து பெரியார்

முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த நடைமுறைகளான, நம்பிக்கை பண்பாடு, மரபு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார்

முனைப்புடன் இருந்தார். இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்ற முயற்சி செய்து தோல்வியடைந்தார். இது போன்ற பிரச்சனைகளால் 1925இல் காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடிஅரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும். பிராமணரல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களை அது வெளிக்கொணர்ந்தது. ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிரச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

காலவோட்டத்தின் ஊடாகப் பெரியார் பல நாடுகளுக்குச் சென்றார். அந்நாடுகளைச் சேர்ந்த அறிவார்ந்த மக்களோடு உரையாடினார். சிங்கப்பூர், மலேசியா (1929–30, 1954) எகிப்து, சோவியத் ரஷ்ய குடியரசு (தற்போதைய ரஷ்யா), கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் போர்த்துகல் (1931–1932) மற்றும் பர்மா (1954இல் நடைபெற்ற புத்தரின் 2500 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார்) ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார். சோவியத் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அவர் பெற்ற பயணஅனுபவங்கள் அவரை சமதர்மக் கருத்துக்களின்பால் நாட்டம்கொள்ள வைத்தன. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடமைவாதியுமான சிங்காரவேலருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். B.R. அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார். B.R. அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

1937இல் ராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937–39) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர் நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944இல் திராவிடர் கழகம் (திக) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி (1952–54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கல்வித் திட்டம் (சாதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை) என விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. கு. காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொன்னூற்று நான்காவது வயதில் (1973) இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு

தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் வலியுறுத்தினார். பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறுவகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்தாக அவர் கூறினார். அம்முறை சுற்றுச்சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினார். வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைபாட்டை மேற்கொள்ள வைத்தது.

## சமயம் குறித்து பெரியார்

முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த நடைமுறைகளான, நம்பிக்கை பண்பாடு, மரபு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார்

நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன் வைத்தார். சமயத்தின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டுமென்றார். "சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள்" என உறுதிபடக் கூறினார். பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தான் நிறுவிய சிந்தனையாளர்கள் அல்லது பகுத்தறிவாளர்கள் அமைப்புகள் மூலமாக மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் செலவழித்தார். கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார். பிராமண அர்ச்சகர்களையும் வேதச் சடங்குகளையும் புறக்கணிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

### பெரியார், ஒரு பெண்ணியவாதி

பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். 1929 முதல் சுயமரியாதைமாநாடுகளில், பெண்களின் மோசமான நிலைகுறித்துகுரல்கொடுக்கத்தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். "திருமணம் செய்து கொடுப்பது" எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையானாள்? என்பதாகும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார். சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார். குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.

1989இல் தமிழக அரசு, மாற்றங்களை விரும்பிய சீர்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் ச உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்திய முன்மாதிரியாக அமைந்த இந்தச்சட்டம் தேசி அளவிலும் இதுபோன்ற சட்டங்கள் இயற்றப்படுவதற் அடிப்படையாக அமைந்தது.

### இரட்டைமலை சீனிவாசன்


இரட்டைமலை சீனிவாசன்

இரட்டைமலை சீனிவாசன் (1859–1945) தாத்தா எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சாதிப்படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காக ராவ்சாகி (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூ (1936) ஆகிய பட்டங்களால் அவர் சிறப்பு செய்யப்பட்டார். அவரது சுயசரிதையான ஜீவி சரித சுருக்கம் 1939இல் வெளியிடப்பட்டது இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரி நூல்களில் ஒன்றாகும்.

தீண்டாமையின் கொடுமைகளை அனுபவித் இரட்டைமலை சீனிவாசன் உரிமைக மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கா உழைத்தார். 1893இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட் மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகி அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினா ஒடுக்கப்பட்ட மக்களோடு தொடர்புடைய கேள்விக பிரச்சனைகள் குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் நீதிக்கட்சி தலைவர்களுட தொடர்ந்து விவாதித்தார். தென்னாப்பிரிக்காவி காந்தியடிகளைச் சந்தித்த இரட்டைமல சீனிவாசன் அவருடன் நெருக்கமானார். 1923இ சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரான அவ நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினை ஏற்படுத் ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூக பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளையு பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.

B.R. அம்பேத்காரின் நெருக்கமானவரா அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற் முதல், இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளி

# 10.1. பெரியார் ஈ.வெ.ரா

- **பிறப்பு :** செப்டம்பர் 17, 1879
- **பெற்றோர் :** வெங்கடப்ப நாயக்கர் – சின்னத்தாயி
- **ஊர் :** ஈரோடு
- பெரியாரின் தாய்மொழி கன்னடம் ஆகும். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று திராவிட மொழிகளை பேசும் ஆற்றல் பெற்றவர்.
- தமது 19-வது வயதில் நாகம்மையை மணந்தார்.

### அரசியல் வாழ்க்கை

- 1918-இல் ஈரோடு நகரசபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1919-ஆம் ஆண்டு காங்கிரஸில் இணைந்தார்.
- 1920-இல் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார்.
- 1921-இல் ஈரோட்டில் நடைபெற்ற கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டார்.
- 1922 – 1923-ஆம் ஆண்டு சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1924-ஆம் ஆண்டு கேரள மாநிலத்தில் வைக்கம் என்ற ஊரில், ஆலய நுழைவு போராட்டம் நடத்தி வெற்றி பெற்றார். ஆதலால் **'வைக்கம் வீரர்'** என பாராட்டப்பட்டார். இவரை வைக்கம் என்ற ஊருக்கு அழைத்துச் சென்றவர் ஜார்ஜ் ஜோசப். (மதுரை மக்கள் ஜார்ஜ்ஜோசப்பை **"ரோசாப்பு துரை"** என்று அழைத்தனர்).

- 1938-இல் மறைமலையடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையார் தலைமையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் ஈ.வெ.ரா-வுக்கு **'பெரியார்'** எனும் பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத்தை வழங்கியவர் டாக்டர். தருமாம்பாள்.
- 1938-இல் **நீதிக்கட்சி**யின் தலைவரானார். 1939-இல் திராவிட நாடு கோரிக்கையை எழுப்பினார்.
- 1944-ஆம் ஆண்டு அண்ணாதுரையின் தீர்மானத்தின்படி, நீதிக்கட்சியின் பெயர் **"திராவிடர் கழகம்"** என மாற்றம் செய்யப்பட்டது.
- 1949-இல் 70 வயதான பெரியார் 28 வயதுடைய மணியம்மையை திருமணம் செய்து கொண்டார்.
- 1953 – ராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வி திட்டத்திற்கு எதிர்ப்பு
- 1970 – யுனெஸ்கோ விருது பெற்றார்.
- 1973 – மத்திய அரசு இவரை பாராட்டி **'அஞ்சல் தலை'** ஒன்றை வெளியிட்டது.
- 1973-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் தமது 94-ஆவது வயதில் இயற்கை எய்தினார்.
- B.R.அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார்.
- இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937 – 39) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் [illegible]

சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சம உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது.

- **'திருமணம் செய்து கொடுப்பது'** எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவைகளுக்கு பதிலாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட **'வாழ்க்கைத் துணை'** என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார்.

### சமயம் குறித்து பெரியார்

- பெரியார் நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன் வைத்தார். சமயத்தின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டுமென்றார்.
- சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள் என உறுதிபடக் கூறினார்.
- கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார்.
- பிராமண அர்ச்சகர்களையும் வேதச் சடங்குகளையும் புறக்கணிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.
- அவர் அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார்.

### பெரியாரின் பத்திரிகைகள்

1. குடியரசு (1925) – சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ செய்தித்தாள்
2. ரிவோல்ட் (1928) – ஆங்கில இதழ்
3. புரட்சி (1933)

- 1922 - 1923-ஆம் ஆண்டு சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1924-ஆம் ஆண்டு கேரள மாநிலத்தில் வைக்கம் என்ற ஊரில், ஆலய நுழைவு போராட்டம் நடத்தி வெற்றி பெற்றார். ஆதலால் '**வைக்கம் வீரர்**' என பாராட்டப்பட்டார். இவரை வைக்கம் என்ற ஊருக்கு அழைத்துச் சென்றவர் ஜார்ஜ் ஜோசப். (மதுரை மக்கள் ஜார்ஜ்ஜோசப்பை "**ரோசாப்பு துரை**" என்று அழைத்தனர்).
- 1925-ஆம் ஆண்டு வ.வே.சு.ஐயரின் சேரன் மாதேவி குருகுலத்தில் நிலவிய வருணாசிரம நடவடிக்கையை பெரியார் எதிர்த்தார்.
- 1925-இல் காஞ்சிபுரத்தில் திரு.வி.க. தலைமையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பெரியார் கொண்டு வந்த "**வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையை**" காங்கிரஸ் ஏற்க மறுத்ததால், பெரியார் காங்கிரஸில் இருந்து விலகினார்.
- 1925-ஆம் ஆண்டு **சுயமரியாதை இயக்கத்தை** தொடங்கினார். 1929-இல் சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநாடு செங்கல்பட்டில் நடைபெற்றது.
- 1930 ஜனவரியில் "குடும்பக் கட்டுப்பாடு" பற்றிய புத்தகத்தை வெளியிட்டார்.
- தேவதாசி ஒழிப்பு மசோதாவை நிறைவேற்றுவதில் முக்கிய கருவியாக செயல்பட்டார். (இந்த மசோதா அக்டோபர் 9, 1947 ல் சட்டமாக நிறைவேற்றப்பட்டது).
- 1937 - இந்தி எதிர்ப்பு போராட்டம் மேலும் 1948, 1952, 1965 ஆகிய ஆண்டுகளிலும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நடத்தினார்.

வயதில் இயற்கை எய்தினார்.

- B.R.அம்பேத்கார் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார்.
- இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937 - 39) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார்.

**பெரியார், ஒரு பெண்ணியவாதி**

- பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார்.
- குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.
- பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார்.
- பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் "**பெண் ஏன் அடிமையானாள்?**" என்பதாகும்.
- சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார்.
- குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.
- 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின்

- அவர் அடிப்படையில் ஐ[illegible]யல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார்.

**பெரியாரின் பத்திரிகைகள்**

1. குடியரசு (1925) - சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ செய்தித்தாள்
2. ரிவோல்ட் (1928) - ஆங்கில இதழ்
3. புரட்சி (1933)
4. பகுத்தறிவு (1934) - இவ்விதழின் மூலம் தமிழ்மொழி எழுத்து சீர்திருத்தம் கொண்டுவந்தார், ரோமானிய எண் முறையை பயன்படுத்தினார்.
5. விடுதலை (1935)
6. திராவிடன் (நீதிகட்சியின் நாளிதலில் 'சித்திரபுத்திரன்' என்ற புனைப்பெயரில் கட்டுரை எழுதி வந்தார்)
7. உண்மை (1970)

**சிறப்புப் பெயர்கள்**

1. சிறைப்பறவை
2. வைக்கம் வீரர்
3. பகுத்தறிவுப் பகலவன்
4. தமிழ்நாட்டு ரூசோ
5. புத்துலக தொலைநோக்காளர்
6. தென்னிந்தியாவின் சாக்ரடிஸ்

- புத்துலக தொலைநோக்காளர் என்றும் **தென்னிந்தியாவின் சாக்ரடிஸ்** என்றும் யுனெஸ்கோவால் பாராட்டப்பெற்றார்.

# 10.2. சி.என்.அண்ணாதுரை

**தமிழக மக்கள் அனைவராலும் அன்பாக "அண்ணா" என்று அழைக்கப்பெற்றார்**

- **பிறப்பு** : 1909 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள்
- **ஊர்** : காஞ்சிபுரம்
- இவரது தந்தை நடராஜ முதலியார், தாய் பங்காரு அம்மாள்.
- இவரது சிற்றன்னை ராஜாமணி அம்மையார் அண்ணாதுரை -ஐ வளர்த்தார்.
- காஞ்சிபுரம் பச்சையப்பர் பள்ளியில் படிப்பை முடித்தவுடன், சென்னை பச்சையப்பன் கல்லூரியல் சேர்ந்து பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்றார் (1934).
- இவரது முதல் கட்டுரை தமிழ் அரசு பத்திரிகையில் வெளியாயிற்று.
- இவரது முதல் சிறுகதை **ஆனந்த விகடனில்** வெளியாயிற்று.
- அண்ணாதுரை, பச்சையப்பன் கல்லூரி மாணவர் சங்கப் பொருட்செயலாளராகவும் (1931), கல்லூரி பொருளாதார அமைப்பின் தலைவராகவும் (1933) இருந்தமையால் மாணவர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றார்.
- இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்கினார்.

- 1935-ல் சென்னை பெத்துநாயக்கன் பேட்டை, கோவிந்தப்பன் நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார்.

### நீதிக்கட்சியில் அண்ணாதுரை, 1934

- சென்னை மாநகராட்சி மேயராக இருந்த நீதிக்கட்சியைச் சேர்ந்த சி.பாசுதேவ் அவரது ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழி பெயர்க்க அண்ணாதுரையை அழைத்தார்.
- மேயர் பாசுதேவ் நடத்தி வந்த பாலபாரதி என்ற இதழை நடத்தும் பொறுப்பு அண்ணாதுரைக்குக் கொடுக்கப்பட்டது.
- அவர் காஞ்சி மணிமொழியார் தோற்றுவித்த 'நவயுகம்' இதழுக்கும், நீதிக்கட்சியின் முதலமைச்சர் பொப்பிலி அரசர் நடத்தி வந்த ஒரு இதழுக்கும் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.
- அண்ணாதுரையின் திருப்பூர் பேச்சும், துறையூர் பேச்சும் தமிழ்நாட்டு மக்களிடையே அவரது செல்வாக்கு பெருகப் பெரிதும் காரணமாக இருந்தன.
- இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியாரும், அண்ணாதுரையும் பங்கேற்றனர். பெரியாருக்கு ஓராண்டு சிறை தண்டனையும், அண்ணாதுரைக்கு நான்கு மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.
- அண்ணாதுரையின் முதல் சிறைவாசம் இதுதான் (1938). அண்ணாதுரையும், பெரியாரும் ஒரே சிறையில் ஒரே தளத்தில் அடைக்கப்பட்டனர்.
- 1941 -ம் ஆண்டு பெரியார் ஹரித்துவாரில் யாத்திரை மேற்கொண்டபோது அண்ணாதுரையையும் உடன் அழைத்துச் சென்றார்.

சட்டை அணிய வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வர முடிவு செய்தார் பெரியார்.

- ஆனால் அண்ணாதுரை கழகத் தொண்டர்கள் வேண்டுமானால் கருப்புச் சட்டையைச் சீருடையாக அணியட்டும்; பிறரை அணியுமாறு கட்டாயப்படுத்த வேண்டாம் என்று கூறினார், எனினும் கருப்புச்சட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### இந்தி எதிர்ப்புப் போராட்டம், 1946

- டி.பிரகாசத்தின் ஆட்சிக்காலத்தில் (1946-1947) மீண்டும் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
- திராவிடர் கழகத்தின் சார்பாக நடத்தப்பட்ட இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு அண்ணாதுரை போராட்டத் தளபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பெரியார் – மணியம்மை திருமணம், 1949

- 70 வயதான பெரியார் 30 வயதான மணியம்மையை மணம் செய்துகொண்டது மட்டுமல்லாமல், அதற்கு அவர் கூறிய காரணம் அண்ணாதுரையை அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டது.
- எனவே, அவரும் அவரது ஆதரவாளர்களும் கழகத்தை விட்டு வெளியேறினர். திராவிடர் கழகம் இரண்டாகப் பிளவுப்பட்டது.

### அரசியல் பயணம்

- இவர் **திராவிட முன்னேற்றக்கழகத்தின் நிறுவனர்** ஆவார்.
- காஞ்சிபுரத்தில் பெரியாரால் துவங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கெதிராக குரல் எழுப்பினார்.
- 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரை **"திராவிடர் கழகம்"** என மாற்றுவதற்கு

- சித்திரை முதல் தேதியை தமிழ் புது வருட நாளாக அறிவித்தார். (14.04.1967)
- 1967ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் **சென்னை மாநிலம்** என்பதை **தமிழக அரசு** அல்லது **தமிழகம்** என பெயர்மாற்றம் செய்தார்.
- புனித ஜார்ஜ்கோட்டையில் அமைந்துள்ள செக்ரடேரியட் என்பதை தலைமைச் செயலகம் எனப் பெயர் மாற்றம் செய்தார்.
- அதே தேதியில் **'சத்யமேவ ஜெயதே'** என்ற அரசுக் குறிக்கோளை **'வாய்மையே வெல்லும்'** என்று மாற்றி அறிவித்தார்.
- இதுபோன்று ஸ்ரீ, ஸ்ரீமதி மற்றும் குமாரி போன்ற சமஸ்கிரு வார்த்தைகளுக்கு மாற்றாக திரு.திருமதி மற்றும் செல்வி என்ற தமிழ் சொற்களை அறிவித்தார்.
- அண்ணாவின் தலைமைப்பண்பு, நிர்வாக நேர்மை, அரசியல் பண்பாடு ஆகியவற்றை சிறப்பிக்கும் வகையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1968ஆம் ஆண்டு கௌரவ டாக்டர் பட்டம் அளித்து அண்ணாவைப் பாராட்டியது. இத்தகைய பெருமைமிகு அண்ணாதுரை, பிப்ரவரி 3, 1969ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

### அண்ணாவின் இறுதி நாட்கள்

- 1968, செப்டம்பர் மாதம் அண்ணாவுக்குப் புற்றுநோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவர்களின் ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் அவர் **'தமிழ்நாடு பெயர்சூட்டு'** விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.
- பொங்கல் திருநாளன்று (ஜனவரி 14) **கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்** சிலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். அதுவே, அண்ணாவின் இறுதிப் பொது நிகழ்ச்சியாகும்.

அண்ணாதுரைக்கு நான்கு மாத சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

- அண்ணாதுரையின் முதல் சிறைவாசம் இதுதான் (1938). அண்ணாதுரையும், பெரியாரும் ஒரே சிறையில் ஒரே தளத்தில் அடைக்கப்பட்டனர்.
- 1941 -ம் ஆண்டு பெரியார் ஹரித்துவாரில் யாத்திரை மேற்கொண்டபோது அண்ணாதுரையையும் உடன் அழைத்துச் சென்றார்.

### இதழ் பணி

- ஆசிரியராக – ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிட நாடு, மாலைமணி, காஞ்சி.
- துணை ஆசிரியராக – குடியரசு, விடுதலை.
- எழுத்தாளரான அண்ணாவை **"தென்னகத்துப் பெர்னாட்ஷா"** என்று அழைத்தனர்.

### திராவிட நாடு

- அண்ணாதுரை 1942, மார்ச் மாதம் 8-ம் தேதி, பெரியாரை விட்டுப் பிரிந்து, காஞ்சிபுரம் சென்று திராவிட நாடு என்ற பெயரில் ஒரு வார இதழைத் துவங்கினார்.
- 1943, ஏப்ரல் 25-ம் தேதி திருச்சியில் கூட்டப்பட்ட 14-வது நீதிக்கட்சி மாநாட்டிற்கு அண்ணாதுரை தலைமை தாங்கும் வாய்ப்பைக் கொடுத்தார் பெரியார்.

### சேலம் மாநாடு, 1944

- 1944, ஆகஸ்டு 17-ம் தேதி சேலத்தில் கூட்டப்பட்ட நீதிக்கட்சி மாநாடு தற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.
- காங்கிரஸ் தலைவராக இருந்த டாக்டர் வரதராஜ் நாயுடு அண்ணாதுரையை நீதிக்கட்சியின் மூளை என்று வர்ணித்தார்.

### திருச்சி மாநாடு, 1945

- 1945, செப்டம்பர் 29-30 தேதிகளில் திராவிடர் கழக மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றது.
- அந்த மாநாட்டில் திராவிடர் கழகத்தார் அனைவரும் கருப்புச்

எனவே, அவரும் அவரது ஆதரவாளர்களும கழகத்தை விட்டு வெளியேறினர். திராவிடர் கழகம் இரண்டாகப் பிளவுப்பட்டது.

### அரசியல் பயணம்

- இவர் **திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர்** ஆவார்.
- காஞ்சிபுரத்தில் பெரியாரால் துவங்கப்பட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டு இந்தி மொழிக்கெதிராக குரல் எழுப்பினார்.
- 1944ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சியின் பெயரை **"திராவிடர் கழகம்"** என மாற்றுவதற்கு பரிந்துரை செய்தார். இதன் மூலம் பெரியாருக்கு மிகவும் நெருக்கமானார்.
- 1947ஆம் ஆண்டு நடைபெற்ற பெரியார் – மணியம்மை திருமணம் திராவிடக் கட்சிக்கு ஒரு பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. இத்திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்ணா அவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி **"1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம்"** என்னும் புதிய கட்சியைத் தொடங்கினார்.
- இவர் 1967-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று, அண்ணா தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

> - 2009-ஆம் ஆண்டு நடுவணரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது.
> - 2010-ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழக அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை நிறுவியது.

### அண்ணாவின் திட்டங்கள்

- தனது ஆட்சிக்காலத்தில் **படி அரிசி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.** (ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி). ஆனால் நிதி நெருக்கடியால், இத்திட்டத்தை தமிழகம் முழுவதும் செயல்படுத்த இயலவில்லை.
- அண்ணா தமிழ் மொழி வளர்ச்சித் திட்டத்தைத் அறிவித்தார்.

### அண்ணாவின் இறுதி நாட்கள்

- 1968, செப்டம்பர் மாதம் அண்ணாவுக்குப் புற்றுநோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மருத்துவர்களின் ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் அவர் **'தமிழ்நாடு பெயர்சூட்டு'** விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.
- பொங்கல் திருநாளன்று (ஜனவரி 14) **கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்** சிலையைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். அதுவே, அண்ணாவின் இறுதிப் பொது நிகழ்ச்சியாகும்.
- அண்ணாவின் இறுதி ஊர்வலத்தில் ஒன்றரை கோடி மக்கள் கலந்து கொண்டனர் என்று **'கின்னஸ்' புத்தகத்தில் பதிவு** செய்யப்பட்டுள்ளது (1983).

### அண்ணாவின் புகழ் பெற்ற பொன்மொழிகள் சில...

- மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு.
- கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு, வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தியாகும்.
- எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
- சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞர் வாதம் ஒரு விளக்கு.
- மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்கு தேவையில்லை; தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
- நல்ல வரலாறுகளைப் படித்தால் தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
- இளைஞர்களுக்கு பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
- இளைஞர்கள் உரிமைப் போர் படையின் ஈட்டி முனைகள்.
- நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.